**கவனிக்க.**– 2007.03.16 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1490 - 2007 මාර්තු 23 වැනි සිකුරාදා - 2007.03.23

*1490 ஆம் இலக்கம் – 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 200 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 200 |
| அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 201 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, மாச்சு 30 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, மாச்சு 16 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## பொலிஸ் திணைக்களம் - மொணராகலை வலயம்

பொருட்கள் ஏலவிற்பனை

பொலிஸ் திணைக்களத்தின் மொணராகலை பொலிஸ் வலயத்தின் பாவனையில் இருந்து அகற்றப்பட்ட பொருட்கள் 2007.04.27 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு மொணராகலை பொலிஸ் திணைக்களத்தின் வளாகத்தில் பகிரங்கமாக ஏல விற்பனை செய்யப்படவுள்ளது.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலில் அடங்கியுள்ள பொருட்களை பார்க்க முடியும்.

ஏல விற்பனை வளாகத்தினுள் உட்பிரவேசிக்கக் கூடிய அனைவர்களும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய அடையாள அட்டை அல்லது அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு கடவுச்சீட்டு ஆகியவற்றில் ஒன்றை முன்வைக்க வேண்டும். மேலும் ஏலத்தில் வாங்கப்படக்கூடிய அனைத்துப் பொருட்களுக்கும் அந்நேரத்திலேலே பணம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வாங்கப்படக்கூடிய பொருட்கள் 2007.04.27 ஆந் திகதி பி. ப. 4.30 மணிக்கு முன் வளாகத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். மேலும் அவ்வாறு தவறும் பட்சத்தில் எவ்விதப் பொருட்களுக்கும் பொலிஸ் திணைக்களம் உரிமை கூறாது.

ஏலத்தில் முன்வைக்கப்படக்கூடிய பொருட்கள், ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை உறுதிப்படுத்துவது போன்ற சகல முடிவுகளையும் இறுதி முடிவு என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

**பட்டியல்**

| தொடர் இலக்கம் | பொருட்கள் | அளவு |
|---|---|---|
| 1. | பாதுகாப்பு தலைக்கவசம் | 05 |
| 2. | இரும்பு அலுமாறி | 01 |
| 3. | தைத்த ஆடைப் பெட்டி | 03 |
| 4. | இலத்திரனியல் பொய்வேறு | 08 |
| 5. | இலத்திரனியல் கேத்தல் | 05 |
| 6. | பெரிய மின்விசிறி (S.F.) | 02 |
| 7. | சிறிய மின்விசிறி (T.F.) | 08 |
| 8. | தண்ணீர் பில்டர் | 11 |
| 9. | அலுமினியம் சட்டி பெரியது 20" | 10 |
| 10. | அலுமினியம் சட்டி பெரியது 18" | 04 |
| 11. | அலுமினியம் சட்டி பெரியது 16" | 21 |
| 12. | அலுமினியம் சட்டி பெரியது 14" | 15 |
| 13. | லந்சேறும் லாம்பு | 08 |
| 14. | சுவர்க்கடிகாரம் | 01 |
| 15. | றோனியோ இயந்திரம் | 01 |
| 16. | மிதிவண்டி | 53 |
| 17. | ஆங்கில தட்டச்சு இயந்திரம் | 06 |
| 18. | சிங்கள தட்டச்சு இயந்திரம் | 07 |
| 19. | இரட்டை இரும்புக் கட்டில் | 08 |
| 20. | கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டி | 01 |
| 21. | வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டி | 08 |
| 22. | வானொலிப் பெட்டி | 02 |
| 23. | இரும்புக் கதிரை | 12 |
| 24. | திருவளை | 01 |
| 25. | தனி வெள்ளை மின்குமிழ் | 16 |
| 26. | இரட்டை வெள்ளை மின்குமிழ் | 14 |
| 27. | மண்வெட்டித் தலை | 16 |
| 28. | சிறிய வாள் | 02 |
| 29. | பெரிய இரும்பு வாளி | 01 |
| 30. | சிறிய இரும்பு வாளி | 23 |
| 31. | இரும்புத் தாச்சி | 03 |
| 32. | கத்தி | 14 |
| 33. | இரும்புக் கட்டில் (தனி) | 10 |
| 34. | ஸைலன் குழாய் | 01 |
| 35. | தண்ணீர் இயந்திரம் | 02 |
| 36. | பெற்றோமெக்ஸ் | 11 |
| 37. | அலுமினியம் சட்டி பெரியது | 06 |

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி,
மொணராகலை.

3-729

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நாத்தாண்டிய, தபால் பஹல வலஹாபிட்டிய, ரேணுகா ஃபாம்பைச் சேர்ந்த மாரசிங்க ஆராச்சிகே உபாலி பியசிரி ஆகிய நான், நாத்தாண்டிய தபால் பஹல வலஹாபிட்டிய, ரேணுகா ஃபாம்பைச் சேர்ந்த விஜேதுங்க முதலிகே மாரி ரேணுகா என்பவரை எனது அட்டோர்ணியாக நியமனம் செய்யும் 2003, சனவரி 14 ஆந் திகதிய டி. எச். எச். ஜயசிங்க பகிரங்க நொத்தாரிசு அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 6674 இலக்கம் கொண்ட அட்டோர்ணித் தத்துவத்தை இன்று தொடக்கம் இரத்துச் செய்து பிரசித்த செல்லுபடியற்றதாக்குகிறேன் எனவும் இனிமேல் அவரால் எனது சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாகமாட்டேன் எனவும் இத்தால் பொதுமக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் அறிவிக்கிறேன்.

மாரசிங்க ஆராச்சிகே உபாலி பியசிரி.

3-700

### அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாத்தளை நிர்வாக மாவட்டம், இல. 01, வெலிவேரிய, கவுடுபெலல்ல எனும் இலக்கத்தில் வசிக்கும் ஜஸ்டின் திஸ்ஸ எனும் விஜேயசிங்க ஆகிய என்னால் மாத்தளை "அனுக்" இல் வசிக்கும் திரு. பிராஹ்மனகே பத்மசிரி சந்திரசேகர அவர்களுக்கு பிரசித்த நொத்தாரிசு, சட்டத்தரணி ரஞ்சனி வினிதா ஹேரத் அவர்களால் உறுதியளிக்கப்பட்ட இலக்கம் 2223, 15.11.2002 ஆந் திகதி குறிப்பிடப்பட்ட, அட்டர்ணி தத்துவத்தை இன்று முதல் இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜஸ்டின் திஸ்ஸ எனும் விஜேயசிங்க

3-659

---

### அட்டோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் இல. B49 1/4, தேசிய வீடமைப்புத் திட்டம், மாளிகாவத்தை, கொழும்பு 10 இல் வசிக்கும் சர்மிலா றெஸ் ஜெசூக் ஆகிய நான், 2004 ஆம் ஆண்டு ஆனி மாதம் 10 ஆந் திகதி நொத்தாரிசு கே. ஏ. டி. டி. பி. நாணயக்கார அவர்களால் 47 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் இல. 55/11, சேர்ச் வீதி, மட்டக்குளி, கொழும்பு 15 இல் வதிபவருமான ஜெசிந்தா எல். சீ. அந்தோனிக்கு என்னால் அளிக்கப்பட்ட அட்டோணித் தத்துவ நியமனத்தை இத்தால் மீளப்பெற்று இரத்துச் செய்து அழித்து விடுகிறேன்.

குறித்த அட்டோணித் தத்துவத்தை இல்லாது ஒழித்ததன் பின், குறித்த அட்டோணித் தத்துவக்காரரால் கையொப்பமிடப்படும் அல்லது நிறைவேற்றப்படும் எந்தவிதமான ஆவணங்களுக்கும் நான் எவ்வகையிலேனும் பொறுப்பாளி அல்லன் என இலங்கை அரசின் பொதுமக்களுக்கு இத்தால் அறியத் தருகிறேன்.

சர்மிலா றெஸ் ஜெசூக்.

3-711

---

## ஏல விற்பனைகள்

### மக்கள் வங்கி - காலி கோட்டை கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் திருத்தமாக 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல*

#### சொத்துக்கள் ஏல விற்பனை

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி இங்கு கீழ்கண்ட ஆதனங்கள் 2007.05.08 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**-தென் மாகாணத்தின், காலி மாவட்டத்திலே, காலி கடவத் சதரையில் காலி மாநகர சபை எல்லைக்குள், கெலின்விதியில் அமைந்துள்ள வருமான வரி இலக்கம் 02 (முன்னர் வருமான வரி இலக்கம் 135) என்ற ஒன்று தசம் மூன்று சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 1.30பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்து கட்டிடங்கள் உட்படவாகும். இக்காணி அதிகாரம்பெற்ற நிலஅளவையாளரான பீ. எம். ஆம்ஸ்ட்ரோன் அவர்களினால் 1872.09.25 ஆந் திகதி அளந்து ஒழுங்கு செய்யப்பட்டஇலக்கம் 678 என்ற வரைபடத்திற்கிணங்க அதிகாரம் பெற்ற நிலஅளவையாளரான டீ. வீரசேகர அவர்களினால் 1972 .01.08 ஆந் திகதி சத்தியப்பிரதியாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட வரைபடத்திற் காட்டப்பட்டிருக்கும்.

**மேலதிக விபரங்களுக்கு.**-2005.09.09 ஆந் திகதியின் அரச வர்த்தமானிப் பத்திரிகையிலும் 2005.12.23 ஆந் திகதியின் "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" எனும் சஞ்சிகைகளிலும் வெளியிடப்பட்ட ஏலவிற்பனை பகுதியை கவனத்திற் கொள்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**-காலி நகரத்தின் மஹவீதியில் தென்புறமாக இலக்கம் 02 என்ற இடத்தில் அமைந்துள்ள ஆதனம்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**-ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் கொள்வனவாளரினால் கீழ் கண்டபடி பணமாக செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையில் 10% ;

(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு விற்பனை விலையில் 1% ;

(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2 %;

(4) இலிகிதர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 உம் ;

(5) விற்பனை செலவும், இதர செலவுகள் இருப்பின் அவையும் ;

(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்காக முத்திரை கட்டணம் ஆகும்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் காலி பஹல டிக்சன் வீதியில் அமைந்துள்ள இலக்கம் 22 என்ற நிலையத்திலுள்ள மக்கள் வங்கி பிரதேச பிரதான அலுவலகத்தின் பிரதேச முகாமையாளர் அவர்களுக்கு செலுத்த வேண்டும். தொலைபேசி இல.: 091-2223563, 2232311, 2234171, 2234174, பெக்ஸ் இலக்கம் : 091-2232230.

உரிமைகோரும் ஒப்பினையையும் இதர விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெற்றுக் கொள்க.

மேற்படி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாதுவிடவும் மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஜீ. பீ. ஆனந்த,
(சமாதான நீதவான்),
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளரும்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2228731.

3-645

---

## வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால்
வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்)
சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

### ஆதனம் ஏல விற்பனை

கணக்கு இல. : 0014 1000 0217 - கொஸ்மோதர தேயிலை தொழிற்சாலை

2005.02.11 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியிலும், 2005.01.08 ஆந் திகதியிடப்பட்ட "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" எனும் பெயரிலான செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 2004.08.26 ஆந் திகதியிடப்பட்ட வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய, ஐந்து கோடி முப்பத்தொன்பது இலட்சத்து நாற்பத்தையாயிரம் ரூபா (ரூ. 5,39,45,000) ஐ உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவுகள், கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் டன்ஸ்டன் கெலார்ட் அவர்களால் 2007.04.10 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மொறவக் கோறளை, கொட்டபொலவில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ராசப்பா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1990, திசெம்பர் 10 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2427 இல் குறிப்பிடப்பட்டதும் "ஒரு கமுவென்னேவத்தை" என அழைக்கப்படும் காணியின் துண்டுகள் பி, சீ மற்றும் டி என அடையாளமிடப்பட்டதுமான நிர்ணயிக்கப்பட்ட அடுத்தடுத்துள்ள காணித்துண்டுகளின் கண் அமைந்துள்ள முழு மண், பயிர்ச்செய்கைகள் மற்றும் கட்டிடங்கள் முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. துண்டுகள் பி. சீ. மற்றும் டி என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட அடுத்தடுத்துள்ள காணித்துண்டுகளின் ஒரே எல்லைகளாவன - வடக்கு மற்றும் கிழக்கு : நில்வல கங்கை ; தெற்கு : பிரதான வீதி ; மேற்கு : இதே காணியின் துண்டு ஏ. இது சொல்லப்பட்ட வரைபடம் இல. 2427 இற்கமைய இரண்டு றூட் முப்பத்தொன்று தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 31.5பே.) விஸ்தீரணமுடையது. கொட்டபொல காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம்ஜீ 4/ 229 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்கண் நிறுவப்பட்டுள்ள பின்வரும் பொறித்தொகுதி மற்றும் நிறுவப்படும் பொறித்தொகுதி ஆகியவற்றுடன் சேர்த்து :-

| | | |
|---|---|---|
| 4 எண். | - | 75 அடி உலர்த்தும் தொட்டிகள் |
| 1 எண். | - | 4 அடி சீசீசீ உலர்த்தி |
| 1 எண். | - | 4 அடி பரகண் உலர்த்தி |
| 3 எண். | - | உருட்டும் கருவி |
| 2 எண். | - | உருட்டி உடைப்பவை |
| 1 எண். | - | 3 ரீ - மின்சார தண்டு பிரிப்பவை |
| 2 எண். | - | மிச்சி சிப்டர் |
| 1 எண். | - | உறிஞ்சி விசிறிபவை |
| 1 எண். | - | சுழலும் சிப்டர் |
| 1 எண். | - | ஊது குழல் |
| 1 எண். | - | வெட்டும் கருவி |
| 1 எண். | - | தூள் விசிறி |
| 1 எண். | - | "ரெரி" பிடுங்குபவை |
| 1 எண். | - | இரட்டை பொதியிடும் கருவி |
| 2 எண். | - | "அவெரி" நிறுக்கும் இயந்திரங்கள் |
| 1 எண். | - | மின்பிறப்பாக்கி |
| 1 எண். | - | ஊட்டும் தத்தும் தொடர்புபடுத்தும், மின் காந்த அதிர்வு தொடர்புபடுத்தும் தட்டு, உயர் உணர் மின்காந்த அதிர்வு, காடி வெட்டப்பட்ட பயண வழி, வளி அமுத்தி வோல்டேஜ் ஸ்திரப்படுத்தும் கருவி, தரமான உப கருவிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றுடன் பூர்த்தி செய்யப்பட்ட நிறம் பிரித்து தேயிலை சுத்தம் செய்யும் இயந்திரம். |

2. கொட்டபொல, கொஸ்மோதர தேயிலை தொழிற்சாலை வளவுகளின் மீதும் அல்லது இதே பொருட்கள் அகற்றப்படும் மற்றும் வைத்திருக்கப்படும், இருக்கும், களஞ்சியப்படுத்தப்படும் அல்லது நிறுவப்படும் வேறேதேனும் இடம் அல்லது இடங்களில் வைக்கப்படும் இதனகத்துப் பின்னர் விவரிக்கப்பட்டுள்ள அசையும் பொறி, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் தனித்தனியாகவும் எல்லாமுமாக -

| | | | |
|---|---|---|---|
| 1. | உலர்த்தும் தொட்டிகள் | - | 16 எண். |
| 2. | தேயிலை உலர்த்தி | - | 3 எண். |
| 3. | தண்டு பிரிப்பவை ரீ. பீ. | - | 2 எண். |
| 4. | நடு வகை சிப்டர்கள் | - | 3 எண். |
| 5. | மிக்கி சிப்டர்கள் | - | 5 எண். |
| 6. | ஷொடர் சிப்டர் | - | 1 எண். |
| 7. | தூள் விசிறி | - | 2 எண். |
| 8. | விசுறும் கருவி | - | 2 எண். |
| 9. | "சென்வெக்" நிறம் பிரிக்கும் இயந்திரம் | - | 1 எண். |
| 10. | "குறிநை" நிறம் பிரிக்கும் இயந்திரம் | - | 1 எண். |
| 11. | இரட்டை பொதியிடும் இயந்திரம் | - | 2 எண். |

| | | |
|---|---|---|
| 12. முழுமையாக தன்னியக்க டீசல் மின்பிறப்பாக்கி | - | 1 எண். |
| 13. உப கருவிகளுடன் அடுப்புக் கூறு | - | 1 எண். |
| 14. எண்ணெய் தாங்கி | - | 1 எண். |
| 15. "சிரொக்கோ" தேயிலை உருட்டும் கருவி | - | 1 எண். |
| 16. தேயிலை உருட்டும் கருவி (வோக்கர்ஸ்) | - | 3 எண். |
| 17. தேயிலை உருட்டும் கருவி (கொமரியல்) | - | 2 எண். |
| 18. பிரிக்கும் கருவிகள் | - | 2 எண். |
| 19. தேயிலை வெட்டும் கருவி | - | 1 எண். |

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

கம்பனிச் செயலாளர்.

3-713/1

---

## வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்)

### ஆதனம் ஏல விற்பனை

கணக்கு இல. : 0014 1000 0691 - கொடமுன தே கர்மான்த சாலாவ என்ற கொடமுன தேயிலை தொழிற்சாலை

2005.02.11 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியிலும், 2005.01.08 ஆந் திகதியிடப்பட்ட "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" எனும் பெயரிலான செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 2004.08.26 ஆந் திகதியிடப்பட்ட வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய, இருபத்து மூன்று இலட்சத்து ஐநூற்றி தொண்ணூற்றி ஆறு ரூபா தொண்ணூற்றி ஆறு சதம் (ரூ. 23,00,596.96) ஐ மேலும், 2004, ஏப்பிறல் 7 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரை பதினெட்டு இலட்சத்து நாற்பத்திரண்டு ஆயிரத்து எந்நூறு ரூபா மட்டும் (ரூ. 18,42,800) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதினைந்து தசம் ஐந்து சதவீத (15.5%) வட்டியுடனும் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவுகள், கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் டன்ஸ்டன் கெலார்ட் அவர்களால் 2007.04.10 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

பிட்டிகல, கொடமுன, கொடமுன தேயிலை தொழிற்சாலை வளவுகளின் மீதும் அல்லது அதே பொருட்கள் அகற்றப்படும் மற்றும் வைத்திருக்கப்படும், இருக்கும், களஞ்சியப்படுத்தப்படும் அல்லது நிறுவப்படும் ஏதேனும் இடம் அல்லது இடங்களில் வைத்திருக்கப்படுகின்ற மற்றும் வைத்திருக்கப்படும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையும் பொறி, பொறித் தொகுதி மற்றும் உபகரணம் தனித்தனியாகவும் எல்லாமுமாக -

| | |
|---|---|
| 1 எண். | ஆழிப் பலகை |
| 1 எண். | தன்னியக்க மானி தொடக்கி |
| 2 எண். | உருட்டி உடைக்கும் கருவி |
| 1 எண். | 3 ரீ வகை மின்சார தண்டு பிரிப்பவை |
| 1 எண். | சோட்டா சிப்டர் |
| 1 எண். | உறிஞ்சி தூற்றுபவை |
| 1 எண். | மிக்சி சிப்டர் |
| 1 எண். | மிடில்ரன் சிப்டர் |
| 1 எண். | இரட்டை பொதியிடுபவை |
| 1 எண். | தண்டு அகற்றுபவை |
| 1 எண். | நிறம் பிரிப்பவை |
| 1 எண். | உலர்த்தி |

அத்துடன்

மேற்கூறப்பட்ட பொறித்தொகுதி மற்றும் உபகரணம் அல்லது அதன் ஏதேனும் பாகம் அல்லது பகுதியை காலத்திற்குக் காலம் பதிலிடும் சொல்லப்பட்ட வளவுகளின் மீதும் நிறுவப்படும் மற்றும் கொண்டுவரப்படும் அசையும் பொறி, பொறித்தொகுதி மற்றும் உபகரணம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

கம்பனிச் செயலாளர்.

3-713/2

---

## வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்)

### ஆதனம் ஏல விற்பனை

கணக்கு இல. : 0014 1000 0691 - கொடமுன தே கர்மான்த சாலாவ என்ற கொடமுன தேயிலை தொழிற்சாலை

2004.11.19 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியிலும், 2004.10.11 ஆந் திகதியிடப்பட்ட "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் 2004.10.12 ஆந் திகதிய "தினகரன்" எனும் பெயரிலான செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 2004.07.15 ஆந் திகதியிடப்பட்ட வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய, அறுபத்தாறு இலட்சத்து எண்பத்தோராயிரத்து ஐநூற்றி அறுபத்தெட்டு ரூபா எழுபத்தேழு சதம் (ரூ. 66,81,568.77)மாத்திரம் சொண்ட தொகையை மேலும் 2004, ஏப்பிறல் 7 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை ஐம்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரம் ரூபா (ரூ. 53,52,000)

கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதினைந்து தசம் ஐந்து சதவீத (15.5%) வட்டியுடனும் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள ஆதனம் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் டன்ஸ்டன் கெலார்ட் அவர்களால் 2007.04.10 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், பெந்தோட்டை வலல்லாவிட்ட கோறளை, கொடமுனவில் அமைந்துள்ளதும் "இம்புல்கஸ்பிட்டியே வத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. டி. ரணவீர அவர்களால் தயாரிக்கப்பட்டு 1997, நவெம்பர் 13 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 3306 இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஏ என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், தேயிலை தொழிற்சாலை மற்றும் பொறித்தொகுதி உட்பட கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு ஏ இன் எல்லைகளாவன - வடக்கு : மத்தகவிலிருந்து பம்பரவான வரையான வீதி ; கிழக்கு : எம். ஜீ. ரெடேனிஸ்ஸினால் உரிமை கோரப்படும் துண்டு 5 ; தெற்கு : யன்கல ஓடை ; மேற்கு : ஜீ. வீ. லீலாவதியினால் உரிமைகோரப்படும் துண்டு7. இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 3306 இற்கமைய ஒரு றூட் மற்றும் முப்பத்தாறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 36பே.) விஸ்தீரணமுடையது. பலப்பிட்டிய காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் பி 355/236 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதனில் அமைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள பொறித்தாகுதி ஆகியவற்றுடனும் சேர்த்து -

3 எண். - அறைகள் முதலியவற்றுடன் பூர்த்தியான தொட்டி கூறுகள்

1 எண். - சீ. சீ. சீ. 34" ரீ/உருட்டி (Roller)
3 எண். - சீ. சீ. சீ. 36" ரீ/உருட்டி
2 எண். - சிரொக்கோ உலர்த்தி - 4 அடி
3 எண். - வோக்கர்ஸ் உலர்த்தி - 4 அடி
4 எண். - ரஸ்ரன் லின்கொல்ன் இயந்திரம் மற்றும் வளி தாங்கியுடன் கே. வீ. 43 கு. வ. மின்பிறப்பாக்கி
5 எண். - இ. மி. ச இனால் நிறுவப்பட்டுள்ள மின்மாற்றி.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

கம்பனிச் செயலாளர்.

3-713/3